விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: எட்டு
சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 13 சனிக்கிழமை (29.07.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 222

# ஐரோப்பிய ஒன்றிய அறிவிப்புக்குப்பின் யுத்தத்தை அரசு தீவிரப்படுத்தி உள்ளது

## தமிழ்ச்செல்வன் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்புக்குப் பின்னர் யுத்த நடவடிக்கைகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளதாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இலங்கைக்கான பிரிட்டன் உதவித் தூதுவர் லெஸ்லி கிரேக் தலைமையிலான குழுவினர் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினர்.

பிரிட்டன் உதவித் தூதுவருடன் இரண்டாம் செயலர் ஜோன் கலி, ஊடகத் தொடர்பாளர் நிலக்ஷன் சுவர்ணராஜா, நிகழ்ச்சி உதவியாளர் குலாளி சிறிசேன ஆகியோரும் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளருடன் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன்; சமாதானசெயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சந்திப்பின் நிறைவில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நேர்காணல் வருமாறு,

நாங்கள் பிரிட்டிஷ் உதவித் தூதுவர் தலைமையிலான குழுவினரைச் சந்தித்துத் தற்போதைய நிலவரம் தொடர்பாக நீண்ட நேரம் கருத்துக்களை பரிமாறிக் கொண்டோம்.

முக்கியமாக தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும் அரசாங்கம் தமிழ மக்கள்மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு ஒரு யுத்தத்தையே எமது மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள ஒரு நிலைமை உருவாக்கியுள்ளது என்பதை சந்திப்பில் விரிவாக (08 ஆம் பக்கம் பார்க்க)



# கண்காணிப்பு பணியிலிருந்து பின்லாந்து வெளியேறியது!

## கடற்றொழில் செய்ய இராணுவம் அனுமதி

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில்மீன் பிடிப்பதற்கு இராணுவத்தினரால் விதிக்கப்பட்டிருந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்றொழிலாளர்கள் மீன் பிடித்தொழிலில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதிவழங்கியுள்ளனர். (து-15,133)

## தட்டாதெருச் சந்தியில் கைக்குண்டுத் தாக்குதல்

வீதியில் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஓர் இராணுவச் சிப்பாயும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 10.45 மணியளவில் யாழ்.தட்டாதெருச் சந்தியில் நடைபெற்றது. இச் சம்பவத்தில் அரசடி வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கே.சிவானந்தம் (வயது-49) என்ற பொதுமகன் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (து-133)

## வவுனியாவில் கிளைமோர் 3ஊர்காவல் படையினர் பலி

வவுனியா புளியங்குளத்தில் நேற்றுநடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் ஊர்காவல் படையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளனர். வவுனியா-ஹெப்பிட்டிக்கொல்லாவ வீதியில் நேற்றிரவு 6.20 மணியளவில் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடமைகளை முடித்து விட்டு தமது இருப்பிடங்களுக்கு இவர்கள் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது இச் சம்பவம் நடந்துள்ளது. கொல்லப்பட்ட (08 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு இல்லையாம்

(கொழும்பு)

**இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றி வந்த தனது நாட்டைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை விலக்கிக் கொள்ளப் போவதாக பின்லாந்து அறிவித்துள்ளது. இது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப்புலிகள் அமைப்பை தடை செய்த பிறகு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் கண்காணிப்புக் குழுவில் தொடரக் கூடாது என்ற நிபந்தனையை விடுதலைப்புலிகள் விதித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் (08 ஆம் பக்கம் பார்க்க)

## உப அதிபர்மீது இராணுவம் தாக்குதல்
## கண்டித்து பாடசாலை மாணவர்கள் திங்களன்று வகுப்புப் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர்மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலை கண்டித்து நாளை மறுதினம் திங்கட்கிழமை மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இதற்கான அழைப்பை யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்துள்ளது.

அவ்வமைப்பு விடுத்துள்ளசெய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.கே.கே.எஸ்.வீதியில் யாழ்.இந்துக் கல்லூரி உப அதிபர் கிருஷ்ணகுமார் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்து தொடர்ந்தும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிலாறு நோக்கி இராணுவம் நகர்வு முறியடிப்புச் சமரில் இரு போராளிகள்சாவு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான மாவிலாறு நோக்கி இராணுவத்தினர் மேற்கொண்ட பாரிய தாக்குதல் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

வெலிக்கந்தையிலிருந்து மாவிலாறு நோக்கி நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட இந்த நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்ட தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகளின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் நேற்றுக் காலை முதல் இரண்டு முறை பாரிய தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோ வெடித்து இருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவின் மஞ்சுக்கட்டு பகுதியூடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சக்தி வாய்ந்த குண்டுகளை ஏற்றிக் கொண்டு உள்நுழைய முயன்ற துணை இராணுவக் குழுவினரின் ஓட்டோ முன்னதாகவே வெடித்துச் சிதறியதில் அதில் இருந்த இருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதாகத் (08 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸார் இருவர் சுட்டுக் கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் அடையாளம் தெரியாத நபர்களினால் பொலிஸார் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பாலையூற்றுப் பூம்புகாரில் நேற்றுப் பிற்பகல் 12.15 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் சார்ஜன்ட் தரத்தை சேர்ந்த சரத் மற்றும் கான்ஸ்டபிள் ஜேசுராஜா என்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்புச் (08 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஜீப் மோதி வயோதிபர் மரணம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் இராணுவ ஜீப் வண்டி மோதியதில் முதியவர் ஒருவர் சம்பவ இடத்தில் மரணமடைந்தார். இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் பலாலி வீதி திருநெல்வேலியைச் சேர்ந்த சின்னையா சிதம்பரப்பிள்ளை (வயது-75) என்ற முதியவரே மரணமடைந்தவராவார். இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-133)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தென்னாபிரிக்கா-இலங்கை டெஸ்ட் தொடர்

# சங்கக்கார-மஹேல இரட்டைச் சதம் வலுவான நிலையில் இலங்கையணி



தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன(224), உப அணித் தலைவர் குமார் சங்கக்கார(229) ஆகி

யோர் இணைப்பாட்டமாக 471 ஓட்டங்களைப் பெற்று நியூசிலாந்தின் ஜோன்ஸ், குறோக் ஆகியோரின் 467 ஓட்டங்கள் என்ற உலக சாதனையை முறியடித்து இலங்கை அணியை வலுவான நிலைக்கு இட்டுச் சென்றுள்ளனர்.

நேற்றைய இரண்டாம் ஆட்ட நேர முடிவில் இலங்கையணி இரண்டு விக்கெட் டுக்களை மாத்திரம் இழந்து 485 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் குமார் சங்கக்கார 229 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தன 224 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் வந்துள்ள தென்னாபிரிக்க அணி இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணியுடன் விளையாடி வருகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று முன்தினம் கொழும்பு எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிப்ஸ், கோல் ஆகியோர் களம் இறங்கினர். அணி 32 ஓட்டங்களை பெற்ற போது அன் ரூ கோல் 17 ஓட்டங்களுடன் பெர்னாண்டோவின் பந்தில் போல்ட்டாகி ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து கிப்ஸுடன் இணைந்த றொடல்ப் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் அணி 45 ஓட்டங்களைப் பெற்றபோது கிப்ஸ் 19 ஓட்டங்களுடன் பெர்னாண்டோவின் பந்தில் நேரடியாக போல்ட்டாகி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து றொடல்ப்புடன் இணைந்த அம்லா நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார். எனினும் அணி 78 ஓட்டங்களைப் பெற்றபோது றொடல்ப் 29ஓட்டங்களுடன் மஹரூப்பின் பந்தில் விக்கெட் கீப்பர் ஜெயவர்தனாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நான்காவது விக்கெட்டுக்காக றொடல்ப்புடன் இணைந்த அணித் தலைவர் பிறின்ஸ் ஒரு ஓட்டத்தை மாத்திரம் பெற்று மஹரூப்பின் பந்தில் விக்கெட் கீப்பர் ஜெயவர்த்தனாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரின் ஆட்டமிழப்புடன் தென்னாபிரிக்க அணி 80 ஓட்டங்களைப் பெற்று நான்கு விக்கெட்டுக்களை இழந்து ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய வில்லியர்ஸ், அம்லாவுடன் இணைந்து திறமையாகத் துடுப்பெடுத்தாடினர். தென்னாபிரிக்க அணி 112 ஓட்டங்களைப் பெற்ற போது அம்லா 19 ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்து வீச்சில் விக்கெட் கீப்பர் ஜெயவர்த்தனாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம் இறங்கிய மார்க் பௌச்சர் நான்கு ஓட்டங்களுடன் முரளிதரனின் பந்தில் ஜெயசூர்யாவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் வில்பியர்ஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைக் குவித்தார். எனினும் தொடர்ந்து களம் இறங்கிய



பொஜே 5 ஓட்டங்களுடன் முரளிதரன் பந்தில் எல்.பி.டிபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

பொஜே தொடர்ந்து களமிறங்கிய நெல், ஸ்ரெயன் ஆகியோர் ஓட்டம் எதனையும் பெற்றுக் கொள்ளாமல் ஆட்டமிழந்தனர். இறுதியில் தென்னாபிரிக்க அணி 50.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 169 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தனது முதலாவது இனிங்சை முடிவுக்குக் கொண்டு வந்தது.

இதில் வில்லியர்ஸ் 65 ஓட்டங்களை அணிக்காக கூடுதலாகப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் இலங்கையணி சார்பாக நான்கு பந்து வீச்சாளர்கள் மாத்திரமே பந்து வீசினர்.

அதில் பெர்னாண்டோ முரளிதரன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுக்களையும் மஹரூப் இரண்டுவிக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

மலிங்க விக்கெட்டு எதனையும் கைப்பற்றவில்லை. தொடர்ந்து தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த இலங்கை அணி நேற்று முன்தினம் முதலாம் நாள் ஆட்ட நேர முடிபில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுச் செய்திகள் அமிர்தன்

## உலகக் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி ஜனவரிக்குள் தயாராக வேண்டும் - சுனில் கவாஸ்கர்

(மும்பை)

உலக கோப்பை கிரிக்கெட் தொடருக்கு இந்திய அணி வரும் ஜனவரிக்குள் தன்னை முழுமையாக தயார்படுத்திக்கொள்ள வேண்டும் என இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் கவாஸ்கர் தெரிவித்துள்ளார்.

2007ஆம் ஆண்டுக்கான உலக கோப்பை கிரிக்கெட் போட்டிகள் மேற்கிந்திய தீவுகளில் மார்ச்- ஏப்ரல் மாதங்களில் நடக்கவுள்ளது. இதற்காக ஒவ்வொரு அணியும் தற்போதிருந்தே திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. இந்திய அணியை பற்றி கவாஸ்கர் அளித்த பேட்டியில்,

ஆடுகளங்களின் தன்மையை நிர்ணயிப்பவை அங்கு நிலவும் தட்ப வெப்பம், காற்று, மைதானம் அமைந்துள்ள இடம் போன்றவைகள்தான். சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளும் செல்ல இயலாததால் அங்கு நிலவும் சூழ்நிலைகளை என்னால் கூற இயலாது. ஆனால் சில மாதங்களுக்கு முன்னர் மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டது உலக கோப்பை போட்டிகளின் போது மிகுந்த பயன்தரும்.

ஜனவரிக்குள் வீரர்களை அறிவிக்குமாறு ஐ.சி.சியும் கெடு விதித்துள்ளது. இளம் வீரர்களுக்கு கரீபிய பயணம் ஒரு சிறந்த அனுபவமாக இருக்கும். மேலும் உலக கோப்பை போட்டிகளுக்கு முன்னர் இந்திய அணி போதுமான அளவு ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கிறது. இதன் மூலம் அணியின் பலம், பலவீனங்களை கண்டறிந்து விடலாம். முத்தரப்பு தொடருக்காக தற்போது இந்திய அணிக்கு அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகள் சிறந்த முடிவை தந்தால் அதைவிட மகிழ்ச்சி வேறொன்றும் இருக்க முடியாது. காலத்திற்கு ஏற்ப பயிற்சி முறைகள் மாறுவதில் தவறேதும் இல்லை. ஒன்பது ஆண்டுகளுக்கு பின் இலங்கையில் தொடரைக் கைப்பற்ற இந்திய அணிக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இதில் இந்தியா வெற்றி பெறும் என்றே நம்புகிறேன். இவ்வாறு கவாஸ்வர் தெரிவித்தார்.

## பிரெட்லீ முதலிடத்தைப் பிடித்தாலும் மெக்ராத்தே சிறந்த பந்துவீச்சாளர்

### அணி வேகப்பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர்

(மெல்போர்ன்)

தரவரிசையில் பிரெட்லீ முன்னணியில் இருந்தாலும் மெக்ராத்தே சிறந்த பந்துவீச்சாளர் என்று அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து பயிற்சியாளர் டிராய் கூலே தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தங்கள் நாட்டு அணி வீரர்களை வரிசைப்படுத்தியுள்ளது. இதில் அந்த அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் முதல் இடத்தில் உள்ளார். அதற்கு அடுத்து வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ உள்ளார். விக்கெட் கீப்பரும் துணைத் தலைவருமான கில்கிறிஸ்ட் 3 ஆவது இடத்திலும் மெக்ராத் 4ஆவது இடத்திலும் உள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர் மெக்ராத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு பிரெட்லீ முன்னால் இடம்பெற்றுள்ளது குறித்து அந்த அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்சியாளர் டிராய் கூலே கூறுகையில்,

அவுஸ்திரேலிய அணியின் தரவரிசையில் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ முதலிடத்தில் இருந்தாலும் அணியைப் பொறுத்த வரையில் இன்று வரைக்கும் சிறந்த வீரர் யார் என்றால் அவர் மெக்ராத்தான். மனைவி ஜானே புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதால் மெக்ராத் சமீபகாலமாக போட்டிகளில் பங்கேற்காமல் இருந்துவருகிறார். தற்போது அவர் ஆசஷ் டெஸ்ட் தொடருக்கு தயாராகும் விதத்தில் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அவரது பந்துவீச்சில் மாற்றம் எதுவும் செய்யமாட்டோம். ஆனால் அவர் விரைவில் பழைய நிலைக்குத் திரும்பும் வகையில் பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்தார்.

டிராய் கூலேயின் கருத்து குறித்து மெக்ராத் கூறுகையில்,

டிராய் கூலேயின் கருத்து மகிழ்ச்சி அளிக்கும் விதத்தில் உள்ளது. என்மீது தேர்வாளர்கள் நம்பிக்கை வைத்திருப்பது சிறப்பானதாகும். இது போட்டிகளில் சிறப்பாக செயல்பட உதவியாக இருக்கும் என்றார்.

36 வயதான மெக்ராத் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இதுவரை 542 விக்கெட்டுக்களை சாய்த்துள்ளார்.

## கனடா தொடருக்குப் பதிலாக ஆஸியில் முக்கோணத் தொடரை நடத்த முடிவு

இந்தியா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையே 5 ஒருநாள் போட்டி கொண்ட தொடர் வருகிற செப்டெம்பர் மாதம் கனடாவில் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது.

போட்டியை நடத்த மைதானம் தயார் நிலையில் இல்லாததால் இந்தத் தொடர் ரத்துசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் இந்திய கிரிக்கெட் சபை 3 நாடுகள் போட்டியை நடத்த விரும்பியது. மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் அவுஸ்திரேலிய அணியையும் சேர்த்து திட்டமிட்டபடி அதே செம்டெம்பர் மாதத்தில் போட்டியை நடத்த வேண்டும் என ஆலோசனை செய்தது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை இந்த 3 நாடுகள் போட்டியை நடத்த விருப்பம் தெரிவித்து இந்திய கிரிக்கெட் சபைக்கு கடிதம் ஒன்று அனுப்பியது. அதில் சம்பியன் தொடர் அக்டோபர், நவம்பர் மாதம் நடக்கிறது. அதற்கு முன்பாக செப்டெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் இந்தியா மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுடன் 3 நாடுகள் போட்டியை நடத்த விரும்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகளை பிரிஸ்பேன், டார்வின் மற்றும் பேர்த் நகரில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் சபை பதில் ஏதும் அனுப்பவில்லை. அதன் பிறகே அவுஸ்திரேலிய போட்டியில் இந்தியா பங்கேற்குமா என்பது தெரியவரும்.



9ஆவது உலக கோப்பை கிரிக்கெட் போட்டி மேற்கிந்திய தீவுகளில் அடுத்த ஆண்டு (2007) மார்ச் மாதம் நடக்கிறது . இந்த போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வழங்கப்படும் சம்பியன் கோப்பை நேற்றுமுன்தினம் டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டது . சம்பியன் கோப்பை. மஸ்கட் மற்றும் லோகோவை படத்தில் காணலாம்.

# நீதிகேட்டதால் பழிவாங்கப்பட்டுள்ளேன் நீதிமன்றத்தில் ஆசிரியர் வழக்கு தாக்கல்

யாழ்ப்பாணம் மயிலனி சைவ மகாவித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமையாற்றி தற்போது யாழ்ப்பாணம் ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஈவினை புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த செல்லையா ஞானச்சந்திரன் யாழ்ப்பாணம் மயிலணி சைவ மகாவித்தியாலய அதிபர் நியமனம் தொடர்பில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு இழைத்த அநீதி குறித்து மேன் முறையீடு செய்தபோது தான் யாழ்ப் பாணம் ஏழாலை மகா வித்தியாலயத்திற்கு பழிவாங்கலாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போதைய அதிபரின் விண்ணப்பத்தை சிபார்சு செய்த ஐந்தாம் பிரதிவாதியான குபேரநாதன் அதிபர் தேர்வு குழாத்தில் இடம்பெற்றிருந்ததாகவும், 53 வயதைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு அவர்களுடைய சுயவிருப்பத்தின் பேரில் அன்றி இடமாற்றம் வழங்கப்படுவதில்லை என்றும் இதற்கு மாறாக தனக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதென்றும் எனவே, நிவாரணம் வழங்கக் கோரி குறிப்பாக தற்போதைய அதிபரை இடை நிறுத்துமாறும், தன்னை யாழ்ப்பாணம் மயி லணி சைவமகாவித்தியாலய அதிபராக நியமிக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வடக்கு கி ழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்ட கல்விப் பணிப்பாளர், தற்போதைய யாழ்ப்பாணம் மயிலனி சைவ மகாவித்தியாலய அதிபர் ஆகியோருக் கெதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி மனுவை விசாரணைக்குஎடுத்துக்கொள்வதற்கு சம்மதம் தெரிவித்து மேல் நீதிமன்ற நீதிபதி சொ.தியாகேந்திரன் பிரதி வாதிகளுக்கு இவ்வழக்குத்தொடர்பில் ஆட்சேபனையிருப்பின்2006ஆம்ஆண்டு ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி இந்நீதி மன்றில் தோன்றி தெரிவிக் கும்படியும் கட்டளை பிறப்பித் திருக் கிறார்.

இவ்வழக்கின் மறுதுரார் தரப்பில் சட்டத்தரணிகளாக ஜெ.ஜெயரூபனின்அனுசரணையுடன்சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் ஆஜராகிறார்.

நிறைவேற்று நிர்வாக அதிகாரிகளுக்கு எதிராக இவ்வாறான வழக்குகள் மட்டக்களப்பு, திருகோணமலை மேல்நீதிமன்றங்களில் அதிகளவு தாக்கல் செய்யப்பட்ட போதும் யாழ்ப்பாணம் மேல்நீதி மன்றத்தில் கல்வி அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதல் வழக்கு இதுவாகும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ-133)

## புலிகளின் தலைவர் சந்திக்கச் சம்மதித்தால் மட்டுமே அகாசி இலங்கை வருவார்-ஜப்.தூதரகப் பேச்சாளர்

(கொழும்பு)

ஜப்பானின் சிறப்புப் பிரதிநிதி யசூசி அகாசியை தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்திப்பதற்கு இணக்கம் தெரிவித்தால் மாத்திரமே அடுத்த மாதம் யசூசி அகாசி இலங்கைக்கு வருவார் என்று ஜப்பானிய தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய சிறப்புப் பிரதிநிதியைச்சந்திப்பதற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் மறுப்பாராயின் விடுதலைப்புலிகளின் நிதிசேகரிப்பு நடவடிக்கைகளுக்கு தடை விதித்தல் மற்றும் ஜப்பானில் இருக்கும் விடுதலைப் புலிகளின் சொத்துக்களை முடக்குதல் பற்றிய தீர்மானத்தை ஜப்பானிய அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜப்பானிய தூதுவருடனான சந்திப்பிற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஜப்பானிய தூதரகம் விரைவில் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொள்ளும் என்றும் தூதரகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். இலங்கை பயணத்தின் போது அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவையும் எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்கவையும் சந்திப்பதற்கும் அகாசி திட்டமிட்டுள்ளார்.

எனினும்விடுதலைப்புலிகளின் செயற்பாட்டிலேயே அனைத்தும்தங்கியுள்ளனஎன்றும்அகாசிஜப்பனவே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் ஏனைய தலைவர்களையும் சந்தித்தார் என்றும்அந்தப்பேச்சாளர்மேலும்குறிப்பிட்டார். அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் யசூசி அகாசி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக கடந்தவாரம் இராஜ தந்திரிகள் தெரிவித்திருந்தனர். (அ)

# சிதம்பரப் பொற்சபையில் தமிழில் பாட அனுமதி வேண்டி நிற்கும் பக்தர்கள்

(கொழும்பு)

தமிழ்நாட்டில் புகழ்பெற்ற சிரம்பரம் நடராஜர் ஆலயத்தில் பொற்சபையிலிருந்து தமிழ் பக்தி பாடல்களானதேவாரம், திருவாசகம்போன்றவற்றை பக்தர்கள் பாட கோவிலை நிர்வகித்து வரும்போது தீட்சிதர்கள் அனுமதிக்கவேண்டும் என்ற கோரிக்கை குறித்து எழுந்துள்ள சர்ச்சைக்கு இரு தரப்புகளும் கலந்தாலோசித்து ஒரு தீர்வு காண்பதே சரியானதாக இருக்கும் என்று பொது தீட்சிதர்கள் சங்கத்தின் சட்ட ஆலோசகரும் வழக்குரைஞருமான ஏ.சம்பந்தம் தெரிவித்துள்ளார்.

தமிழோசைக்கு அளித்த ஒரு பேட்டியில் சம்பந்தம் இந்தக் கோவிலில்,1987ஆம் ஆண்டில் தமிழ் ஆர்வலர்களின் கோரிக்கையை ஏற்று தீட்சிதர்களே ஆறுகால பூஜைகளின் போது, வேத மந்திரங்களுடன் தேவார திருவாசகப் பாடல்களை பாடிவருவதாகக் கூறினார்.

ஆனால் இந்த முறை பக்தர்களும் ஓதுவார்களும் பொற்சபையிலிருந்து தாங்களே இந்த பாடல்களை பாடி இறைவனை வழிபட அனுமதிக்கப்படவேண்டும் என்று கோருவதாலேயே இந்தப் பிரச்சினை எழுந்துள்ளதாக அவர் கூறினார்.

இது குறித்து தமிழக அரசின் இந்து அறநிலையத்துறை அதிகாரி இரண்டாண்டுகளுக்கு முன்னரே அளித்த உத்தரவில் தீட்சிதர்கள் பொற்சபையிலிருந்து தேவார திருவாசகப் பாடல்களைப் பாடலாம் என்றும் மற்றவர்கள் பொற்சபையின் முன்னுள்ள பிரகாரத்திலிருந்து அந்த பாடல்களை பாடலாம் என்று கூறப்பட்டிருப்பதாகவும் கூறிய சம்பந்தம் இந்த உத்தரவைத் தாண்டி புதிய முடிவு எடுக்கப்படுமானால் அதன் சட்டபூர்வ தன்மை குறித்து நீதி மன்றங்கள்தான் முடிவு எடுக்க முடியும் என்றார். (அ)






இம்மாதம் 23ஆம் திகதி நடைபெற்ற கோப்பாய் லயன் கழகத்தின் 22 ஆவது பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொண்ட 2006/2007க்கான புதிய தலைவர் லயன் K.தவநாயகம் பதவியேற்ற பின்பு மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பிப்பதையும், கருமதிருதி வைத்திய கலாநிதி லயன் V.தியாகராசா நிற்பதை முதல்படத்திலும், பிரதம விருந்தினர் லயன் K.துரைராசா (மாவட்ட இணைப்பாளர் 306 B 1) அவர்கள் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## இராசி பலன்

**29.07.2006**
**(ஆடி 13, சனிக்கிழமை)**
**சதுர்த்தி மாலை 5.08 மணிவரை**
**பூரம் முற்பகல் 10.35மணிவரை**
**இராகுகாலம் 9.03-10.33 மணிவரை**
**சுபநேரம் 3.03-4.33 மணிவரை**
**நாக சதுர்த்தி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, அமைதிக்குறைவு, எடுத்த காரியம் தாமதம், பணவிரயம். |
| இடபம் | தொழில் விருத்தி, தாய்வழி உறவு, ரோக பயம், சுபசெலவு. |
| மிதுனம் | கூட்டு முயற்சி, வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, போசனசுகம். |
| கடகம் | தனவிரயம், மாதர்நட்பு, முயற்சி தாமதம், உஷ்ண வியாதி. |
| சிங்கம் | தேகநலன், சயனசுகம், கற்பனை மிகுதி, நல்லமுயற்சி. |
| கன்னி | காரிய அலைச்சல், மனஸ்தாபம், வாக்கு மேன்மை, பணவிரயம். |
| துலாம் | இஷ்டசித்தி, பெருமையடைதல், புதிய திருப்பம், நல்ல வருமானம். |
| விருச்சிகம் | செய்தொழில் விருத்தி, தூரதேசச் செய்தி, தேகநலன், போசனசுகம். |
| தனுசு | கட்டுப்பாடு, பிதாசிந்தை, திடீர் நன்மை, ரோகநிலை. |
| மகரம் | வாகனபயம், நண்பர்கள் விரோதம், காரிய தாமதம், ஆரோக்கியக்குறைவு. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், கௌரவ நிலை, பொருள் சேர்க்கை, போசனசுகம். |
| மீனம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |

- வளவன்

# மீட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம் 1(2005/2006) கற்கைநெறிக்கான பரீட்சைகள் ஆவணி மாதம் 26, 27ஆம் திகதிகளில் நடைபெற இருப்பதனால், இப்பரீட்சைக்குரிய மீட்டல் வகுப்புகள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப் பாண நிலையத்தினால் ஆவணி மாதம் 5, 6ஆம் திகதி களில் யாழ்.பல்கலைக்கழக் நூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளன.

இப்பரீட்சைக்கு தோற்ற விருக்கும் அனைத்து மாணவர்களும் தவறாது சமூகமளிக்குமாறு இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

# தங்க ஆபரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் சிறிய தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறும் யாழ்.போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ)

# முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

கால்நடை வளர்ப் போர்கூட்டுறவுச்சங்கம் பொது முகாமையாளர் தி.ஞானவேல் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் இணுவில் மக்கள் வங்கி பொது முகாமையாளர் செ.கந்தசாமி பிரதம விருந்தினராகவும், முன்பள்ளி இணைப்பாளர் திருமதி எஸ்.செல்வரஞ்சனா, முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் எஸ்.செல்வநேசன்,

கும்பிழாவளைப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபைத் தலைவர் எஸ்.பத்மநாதன், சுகாதார போஷாக்கு உத்தியோகத்தர் ரி.சுதர்சன், அளவெட்டி மத்தி கிராம சேவகர் இ.கெங்காதரன், இளைப்பாறிய உப அதிபர் க.அருளம்பலம் சுரேஸ் குமார் தம்பதிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள். (கு)

அன்பு வாசகர்களே!

நல்லூர்க் கந்தனின் வருடாந்த
மஹோற்சவத்தை முன்னிட்டு
வலம்புரியில் இம்முறையும்
"நல்லூர் கந்தன் பாமாலை"
வெளிவரவுள்ளது. நல்லூரானைத் துதி செய்யும்
உங்கள் பாமாலைகளை 8 வரிகளுக்கு உட்பட்டதாக எழுதி

நல்லூர்க் கந்தன் பாமாலை
வலம்புரி
இல.03 இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

## இன்று ஒரு தகவல்

# யாருக்குத் தேவை?

ஓர் ஊரிலே ஒரு பிச்சைக்காரன் இருந்தான். எப்பொழுதும் கையிலே ஒரு திருவோடு வைத்திருப்பான். வீடு வீடாகப் போய் பிச்சை கேட்பான். போடுவார்கள். அதைச் சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்வான். இப்படியாக அவன் வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள், வழக்கம் போல அவன் திருவோட்டைக் கையிலே ஏந்திக்கொண்டு தெரு ஓரமாகப்போய்க் கொண்டிருந்தான்.

அப்பொழுது திருவோட்டிலே 'டங்' கென்று ஒரு சத்தம் கேட்டது. என்னவென்று பார்த்தான். யாரோ ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டிருந்தார்கள். அதைத் தனியாக எடுத்து துணியிலே முடிந்து வைத்துக்கொண்டான். அதன்பின் சில வடுகளிலே அவனுக்கு வேண்டிய உணவு கிடைத்துவிட்டது. அதை எடுத்துக்கொண்டு வழக்கமாகத் தங்குகிற மண்டபத்துக்குப் போனான்.

அவனைப் போன்றவர்கள் எல்லோரும் அந்த மண்டபத்திலேதான் தங்குவது வழக்கம். எல்லோரும் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். இவனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அந்த ஒரு ரூபா நாணயத்தைக் கையிலே வைத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். அதைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறான். கொஞ்சநேரம் ஆச்சு.

பக்கத்திலே படுத்திருந்தவனை எழுப்பினான். நடந்ததைச் சொன்னான். அதைக்கேட்டு மற்றப் பிச்சைக்காரன் சொன்னான். இதோ பார்... நமக்கு உணவும் உடையும் தான தேவை... இவை இரண்டும் நமக்குச் சுலபமாகக் கிடைக்கிறது. அதனாலே அதைத் தவிர மற்ற எல்லாமே நமக்குச் சுமைதான்...!

இந்த நாணயம் நமக்கு வேண்டாத ஒன்று... இருந்தாலும் அது யாருக்கு அதிகமாகத் தேவைப்படுகிறதோ அவர்களுக்குக் கொடுத்துவிடு...!

இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் பிச்சைக்காரன் மற்றப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டான்.

ஆனால் இந்தப் பிச்சைக்காரனுக்கு தூக்கம் வரவில்லை. யாருக்குக் கொடுப்பது என்று யோசனை பண்ணிகொண்டே உட்கார்ந்திருந்தான்... விடிய ஆரம்பித்து விட்டது. அந்த நேரத்திலே இவனுக்கு லேசாகத் தூக்கம்! இப்போ... போர்முரசு ஒலிக்கிற சப்தம் கேட்டது.எல்லோரும் விழித்து எழுந்து போய்விட்டார்கள். இவன் மட்டும் தூங்கிக் கொண்டேயிருந்தான். கிட்டத்திலே போர்முரசுச் சப்தம் கேட்ட போது அவன் விழித்துக்கொண்டான்: பரபரப்பாக எழுந்தான்.

கையிலே காசு அப்படியே இருந்தது. எழுந்தான். தூரத்திலே ராஜா தேரிலே வந்து கொண்டிருந்தா... பின்னால் வரிசை வரிசையாகப் போர்வீரர்கள்.

இவர்கள் போர் செய்வதற்கு என்ன காரணம் என்று பிச்சைக்காரன் யோசித்துப் பார்த்தான். அதற்குள்ளே தேர் கிட்ட வந்துவிட்டது. உடனே பிச்சைக்காரன் என்ன செய்தான் தெரியுமா? தன் கையிலே இருந்த நாணயத்தை அரசனின் தலைக்கு மேலாகத் தூக்கி எறிந்தான்.

ஏதோ வந்து விழுந்த மாதிரி இருந்ததும் மன்னர் குனிந்து பார்த்தார். காலடியில் ஒரு ரூபா நாணயம். பக்கத்திலே நின்ற வீரர்கள் உடனே ஓடிப்போய் அந்தப் பிச்சைக்காரனைப பிடித்துக்கொண்டு வந்தார்கள். விசாரணை நடந்தது.

"நீ எதற்காக இப்படிச் செய்தாய்?" என்று கேட்டார்கள். பிச்சைக்காரன் பதில் சொன்னார். என்ன நடந்ததென்று விபரமாகச் சொன்னான். அதன்பின் சொன்னான்.

"மன்னர் எதற்காகப் படையெடுத்துப் போகிறார்? வெற்றியும் பொருளும் தேடுவதற்காகத் தான் அவர் வேறு நாட்டுககுப படையெடுத்துப் போகிறார். அதனால் பணத்தின் தேவை அவருக்குத்தான் அதிகம் என்று முடிவு பண்ணினேன்.

அவரிடம் நேரில் கொடுக்கலாமென்றால் அவரை நெருங்க என்னை விடமாட்டீர்கள்.இந்தச் சமயத்தை விட்டால் இப்படிப் பட்ட வாய்ப்பு மறுபடியும் கிடைக்காது. அதனாலேதான் இப்படிச் செய்தேன்.

எனக்கு அதிகமாகச் சிந்திக்கத் தெரியாது! நான் செய்தது தவறு என்றால் தண்டனை கொடுங்கள். ஏற்றுக்கொள்கிறேன் என்று ரொம்பப் பணிவாகச் சொன்னான்.

இதைக்கேட்டதும் மன்னனுக்கு அந்தப் பிச்சைக்காரனைப் பற்றியும் புரிந்தது. தன்னைப் பற்றியும் புரிந்தது. இப்படி ஒர கதை உண்டு. தேவைக்கு அதிகமாக இருப்பது எல்லாமே ஒரு சுமைதான். எது சுமை என்று முடிவு செய்து அதை இறக்கி வைத்துவிடத் தெரிந்தது என்றால் வாழ்க்கையே சுகம்தான்!

தேவைக்கு அதிகமாக வைத்திருந்தார் ஒருவர். ஒருநாள் அவர் முன் சில பிச்சைக்காரர்கள் வந்து நின்றார்கள். "ஐயா...நாங்கள் பிச்சைக்காரர்கள் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப் போகிறோம். அதற்காக நிதி வசூல் பண்ண வந்திருக்கிறேன். ஒரு நூறு ரூபா கொடுத்தீகள் என்றால் நல்லது... என்றார்கள்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "நூறு ரூபாவா?... அதெல்லாம் கொடுக்கமுடியாது" என்றுவிட்டார். "சரி , ஒரு பத்து ரூபாவாவது கொடுங்கள்" என்றார்கள்."அதுவும் முடியாது" என்றார். "சரி , ஒரு ரூபாவாவது கொடுங்கள்" என்றாா கள். "ஒரு சதம் கூடக் கொடுக்கமாட்டேன்" என்றார் இவர். " சரி, அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்" என்றார்கள். "என்ன செய்ய வேண்டும்"என்று கேட்டார் அவர்."நீங்களும் எங்கள் சங்கத்திலே ஒரு மெம்பராகச் சோர்ந்து விடுங்கள்" அப்படி என்று சொன்னார்கள்... எப்படி?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெற்றோலியக் கூட்டுத்தாபன விவகாரம்

# ஜனாதிபதி மீது எமக்கு நம்பிக்கையுண்டு என்கிறது ஊழியர் தொழிற்சங்கக் கூட்டமைப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீதும் அவரின் தொழிற் சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர மீதும் எமக்கு பூரண நம்பிக்கையுண்டு. இந்நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியப் பிரிவுத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அஜந்த டிமெல் தொடர்ந்து தலைவராக செயற்படமாட்டார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதுடன் இந்தப் பிரச்சினை இரு வாரங்களில் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையும் உள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அஜந்த டிமெல் தலைவராக செயற்படுவாரானால் நாங்கள் தொழிற்சங்கப் போராட்டத்தை ஆரம்பிக்கும் நிலைமையேற்படும் ஏன்று தொழிற்சங்க கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ராஜகருணா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை நிப்பொன் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

நாங்கள் தனிப்பட்ட நோக்கங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யவில்லை.எமது தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகவும் போராட்டம் நடத்தவில்லை. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை பாதுகாப்பதற்காகவே போராட்டம் நடத்தவேண்டியேற்பட்டது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்று பிரிவுகளாக செயற்படுகின்றது. இதுவர்ர காலமும் ஒரு தலைவரே செயற்பட்டுள்ளார். திடீரென இன்னுமொரு தலைவர் தேவையா ?வீண் செலவு எதற்காக ? என்பதே எமது கேள்வியாகும். புதிய தலைவருக்கு ஒரு கோடிக்கு மேற்பட்ட செலவில் வாகனம் கொள்வனவு செய்யவேண் டிவரும்.

அஜந்த டிமெல் என்ற தனிப்பட்டவர் மீது எங்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. இன்னுமொரு தலைவர் தேவையில்லை என்றே கூறுகின்றோம்.

கடிதம் மூலம் எமக்கு உறுதியளித்து எமது தொழிற் சங்கப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். அத்துடன் இரண்டு வாரங்களில் பிரச்சினை தீர்க்கப்படும் என்றும் நம்புகின்றோம். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குகின்றது. இதற்கு மேலும் சுமை வேண்டாம். (அ)

## குப்பைகளைக் கொள்வனவு செய்ய செயற்திட்டம்

(கொழும்பு)

வீட்டிலிருந்து அப்புறப்படுத்தும் குப்பைகளை கொள்வனவு செய்வதற்கான செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது.


அதற்கமைய சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் அதனை கொள்வனவு செய்வதற்கு நிலையமொன்று அமைக்கப்பட்டுள்ளது.மத்திய சுற்றாடல் அதிகார சபையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளது. (அ-9)

# யாழ்.ஆயரின் வெள்ளிவிழா நிகழ்வுகள்

யாழ். ஆயரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் நாளை புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறவுள்ளன. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆயர் பட்ட வெள்ளிவிழா நிகழ்வுகள் நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது. பாப்பரசரின் பிரதிநிதி உட்பட இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவையினர் மற்றும் இலங்கை மறை மாவட்டங்களைச் சேர்ந்த குருக்கள் துறவிகள் என ஏராளமானோர் இந்நிகழ்விற்காக யாழ். நகரில் கூடவுள்ளனர். ஆயரின் நெருங்கிய உறவினர்கள் வெளி நாடுகளிலிருந்து வருகைதரவுள்ளனர். 30 ஆம் திகதி யாழ். மறை மாவட்ட நிகழ்வுகள் நிறைவேறிய பின்னர் 31 ஆம் திகதி காலை 9.00மணிக்கு அவரின் சொந்த இட மான ஊர்காவற்றுறையில் வெள்ளி விழாத் திருப்பலி யும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

ஆயரின் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் முடிந்த பின்னர் 31ஆம் திகதி யாழ். கரித்தாஸ் நிறுவன இயக்குநர் ஜெயக்குமார் அடிகள் தலைமையில் ஆயர் பேரவையினர் மதத்தலைவர்களையும் சமாதானக் குழுவினரையும் சந்திப்பார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்ப்பாண கத்தோலிக்க திருச்சபை யாழ்.கரித்தாஸ் நிறுவனம் ஊடாகஆற்றிய பணிகளையும் பார்வையிடுவார்.

ஆவணிமாதம் 1ஆம் திகதியிலிருந்து 3ஆம் திகதி வரை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அமர்வு வரலாற்றில் முதல் தடவையாக யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெறும். 4 மாதங்களுக்கு ஒரு தடவை நடைபெறும் இந்த அமர்வை முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதலாவது தினம் காலையில் பாப்பர சரின் பிரதிநிதி இந்த அமர் வில் கலந்துகொள்வார். அதன் பின்னர் ஆயர்கள் மட்டும் அமர்ந்திருந்து அரசி யல் நிலைமைகள் பற்றியும், திருச்சபை நிலைமைகள் பற்றியும் மற்றும் விடயங்கள் பற்றியும் கலந்துரையாடுவர். மூன்றாம் திகதி பேரவை நிறைவுற்றதும் ஆயர்கள் கொழும்புதிரும்புவர். கொழும்பிலிருந்து போக்குவரத்து ஒழுங்குகள் விஷேட விதமாக செய்யப்படவுள்ளது. திரும்பும் வழியில் தமிழீழ விடுத லைப் புலிகளின் அரசியல் துறையினரையும் சந்திக்க வுள்ளனர்.



ஐந்தாம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு கொ ழும்பு வாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல அன்னை ஆலயத்தில் யாழ். ஆயரின் வெள்ளிவிழா நன்றித் திருப்ப லியை ஒப்புக்கொடுப்பார்கள். ஆறாம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு லூசியாஸ் பேராலயத்தில் ஆயரின் வெள்ளிவிழாத் திருப்பலிகள் நடைபெறவுள்ளன.

# சில ஊடக நிறுவனங்கள் இன வன்முறையை தூண்ட முயல்கின்றன-ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்கால சந்ததியினருக்காக தேசத்தின் கலாசார மரபுகள் பேணிப்பாதுகாக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பேசியுள்ளார்.

கலாசார மரபுகளை பேணிப் பாதுகாத்துக் கொண்டு அபிவிருத்தியை மேம்படுத்துவது சமூகத்தின் மதிப்பை உயர்த்துமென்று அவர் தெரிவித்துள்ளார்.

எமது முன்னோர்களிடமிருந்து பெற்ற ஒழுக்கவிழுமியங்களை நாட்டில் வளர்ப்பதன் மூலம் அடுத்த சந்ததியை சரியான பாதையில் செலுத்த முடியுமென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.நேற்று முன்தினம் அலரிமாளிகையில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமகால சிறுவர்களின் கலாசார விழுமியங்கள் சீர்குலைந்துள்ளதினால் பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். நாம் செய்த நல்வினைகளை பதிவு செய்யக் கூடிய புத்தகங்கள் மீளவும் அறிமுகம் செய்யப்படுவது காலத்திற்கு பொருத்தமான நடவடிக்கையாகும்.

ஒருதாய் மக்களின் பிள்ளைகளாக அனைவரும் செயற்பட வேண்டிய காலகட்டத்தில் சில ஊடக நிறுவனங்கள் இனக்குழுக்கள் மத்தியிலான வன்முறையை தூண்டிவிட முயல்கின்றனர்.

நாட்டு மக்கள் அனைவரும் தேசத்தின் முன்னேற்றத்திற்காக கைகோர்த்து செயற்பட வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-9)

# வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெரியளவில் முதலீடு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

பெரியளவிலான வெளிநாட்டு முதலீட்டாளர்க ளுக்கு நாட்டில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டிலுள்ள மத்திய மற்றும் சிறிய முதலீட்டாளர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சிறிய மற்றும் நடுத்தர முதலீட்டாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் மற்றும் வியாபார நடவடிக்கையை அபிவிருத்தி செய்வதற்கும் விளக்கமளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கருத்தரங்கை இலங்கை ஐக்கிய வர்த்தக சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. (அ-9)

# மஹோற்சவம்

வட்டு கிழக்கு -துறட்டிப்பனை அருள்மிகு முத்துமாரி அம்பாள்ஆலய மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது. விசேட உற்சவங்களாக 5ஆம் திகதி சனிக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 7ஆம்திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும்,. 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும்,


9ஆம்திகதி புதன்கிழமை தீர்த்தோற் சவத்துடன் மஹோற்சவம் நிறைவு பெறுகின்றது. (அ-49)

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை

முருக-தனுஷ்கோடி

38



நிர்வாகத்தில் பல பிரச்சினைகள் தோன்றிய போது கட்சி வித்தியாசம் பார்க்காமல் பாரபட்சமற்ற முடிவுகளை எடுத்தார். அவரது முடிவுகள் சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் ஆளுங் கட்சிக்காரர் என்பதால் சலுகை காட்டினார் என்று எதிர்க்கட்சியினர் கூட அவரைக் குறை கூற முடியாது.

'' காமராஜ் முதல் மந்திரியாக இருந்தபோது, மற்ற மந்திரிகளின் நிர்வாகத்தில் சாதாரணமாகத் தலையிடுவதில்லை. இந்தப் போக்கே அந்த நிர்வாகத்துக்கு நல்ல பெயரினைத் தேடித்தந்தது '' என்று காமராஜ் அமைத்த மூன்று மந்திரி சபையிலும் இடம்பெற்ற பக்தவத்சலம் கூறியது ஒன்றே காமராஜின் பெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

தூக்குத் தண்டனை அடைந்த குற்றவாளியின் மனு ஒன்றைப் பரிசீலனை செய்தபோது , அதை ஏற்றுக் கொள்வதற்கு நியாயம் இல்லை என்று பக்தவத்சலம் கருத்துத் தெரிவித்தார். ஆனால் அப்போது இருந்த கவர்னர் வேறு அபிப்பிராயப்பட்டார். கவர்னரின் கருத்து பக்தவத்சலத்துக்கு ஏற்புடையதாக இல்லை.பின்னர் பக்தவத்சலத்தின் கருத்துக்குக் கவர்னர் வந்தார். இது குறித்து முதல் மந்திரியின் அங்கீகாரம் பெறக் காமராஜிடம் பக்தவத்சலம் பேசினார். அப்போது காமராஜ், அதில் அடங்கியிருந்த சட்ட நுணுக்கத்தைத் தெளிவாக உணர்ந்து தமது கருத்தை வெளியிட்டார். இந்தச் சம்பவத்தை அடிக்கடி நண்பர்களிடம் கூற நான் கேள்விப்பட்டிருக்கிறேன். நிர்வாகத்தின் நுணுக்கத்தை காமராஜ் நன்கு உணர்ந்தவர் என்பதற்கும், உள்ளுணர்வு என்று கூறுவார்களே அது காமராஜிடம் இருந்தது என்பதற்கும் இதைவிட வேறு சான்று எதுவும் தேடி அலைய வேண்டியது இல்லை.

காமராஜின் ஆட்சி மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாகவும் விளங்கியது. காமராஜின் கட்சியின் கீழ் தமிழ்நாடு பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருப்பதை நான் காணுகிறேன். தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்று முன்னாள் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் பேசியது என் நெஞ்சில் இன்னும் பசுமையாக இருக்கிறது.

அன்றாட அரசாங்க நிர்வாகத்திலும், திட்டங்கள் போன்ற பெரும் பணியிலும் ஊழல்கள் குறைந்து, திறமை அதிகமாகக் காணப்படும் மாநிலம் என நேருஜி குறிப்பிட்டது, காமராஜின் சுத்தமான ஆட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டு.

சமுதாய நலத் திட்டத்திற்கான மத்திய அரசின் மான்யத்தைப் பூரணமாக பயன்படுத்திக் கொண்டே ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என முன்னாள் மத்திய திட்ட மந்திரி நந்தாவும்; ஆரம்பக்கல்வி கிராமங்களுக்கு மின்சார விநியோகம் ஆகியவற்றில் எந்த மாநிலத்தைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னிலையில் நிற்கிறது என முன்னாள் மத்திய சமுதாய நலத் திட்ட மந்திரி கே.சி.டேயும் குறிப்பிட்டது. காமராஜ் ஆட்சியில் குறிப்பிடத்தக்கது மட்டுமன்றி, குறித்து வைத்துக் கொள்ள வேண்டிய பாராட்டுரைகளுமாகும். உணவு உற்பத்தித் துறையில் தமிழ்நாடு தன்னிறைவு பெற்றுவிட்டது இது என்றும் இல்லாத சாதனை என்று மத்திய துணை மந்திரி எம்.வி.கிருஷ்ணப்பா சொன்னது தலைவரின் களவு நினை வாக்கப்பட்டதற்குக் கிடைத்த பாராட்டாகும்.

## தாயும் மகனும்

நான் 1943இல் சிறையில் இருந்து விடுதலையாகி வந்தேன். நான் வந்த ஒரு வாரத்தில் என் தகப்பனார் காலமானார். எங்கள் குடும்பப் பொறுப்புக்களை எங்கள் தமையனார் ஏற்றுக்கொண்டார். அவருடைய உத்தரவுப்படி வியாபாரத்தின் பொருட்டு 1948 ஆம் ஆண்டு நான் சென்னை வந்து சேர்ந்தேன். ஆயினும் நான் அடிக்கடி விருதுநகர் போவது உண்டு. அப்படிப் போய்ப் பார்ப்பேன். அப்படிப் போகும் போதெல்லாம் தலைவர் காமராஜின் தாயாரை போய்ப் பார்ப்பேன்.1954 இல் காமராஜ் முதல் மந்திரியான பிறகு அவர் தாயார் மகிழ்ச்சியுடன் இருப்பார் என எண்ணினேன் . ஆனால் அவர் தாயாருக்கு வேறு கஷ்டம்.

தலைவர் தன் தாயாரின் மேல் செலவுக்கு மாதம் 120 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். காமராஜ் முதல் மந்திரியான பிறகு செலவுக்குக் கொடுக்கப்பட்ட 120 ரூபாய் தாயாருக்குப் போதவில்லை. அதற்கு அன்னையார் என்னிடம் ஒரு காரணத்தையும் சொன்னார்.

அய்யா மந்திரியாக இருப்பதால் என்னைப் பார்க்க யார் யாரோ வருகிறார்கள். சிலருக்குத் தமிழ் கூடப் பேசத் தெரியவில்லை. என்னென்ன பாஷையோ பேசுகிறார்கள். அப்படி என்னைப் பார்க்க வருகிறவர்களுக்கு ஒரு சோடா கலர் கொடுக்காமல் எப்படி அனுப்புவது? ஆகையால் அய்யாவிடம் சொல்லி, மாதம் 150 ரூபாய் கிடைக்க ஏற்பாடு செய்தால் நலம் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார் தாயார்.

எனக்கு அன்னையார் கேட்பது சரியாகவே தோன்றியது. சென்னை வந்ததும் தலைவரை அவரது வீட்டில் போய்ப் பார்த்தேன். தாயார் சொன்னதைத் தலைவரிடம் கூறினேன். ஆனால் தலைவரோ 120 ரூபாய்க்கு மேல் கொடுக்க மறுத்துவிட்டார்.யார் யாரோ பார்க்க வருவார்கள். உண்மைதான். வரக் கூடியவர்கள் சோடா கலர் கேட்கிறார்களா? அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாம். தவிர, கையில் கொஞ்சம் ரூபாய் போய்ச் சேர்ந்தால் அம்மா எங்காவது கோவில் குளம் என்று போய்விடுவார். வயதான காலத்தில் வெளியூர் போவது நல்லதல்ல. ஆகையால் இப்போது கொடுத்து வரும் 120 ரூபாயே போதும் என்று சொல்லிவிட்டார்.

ஒருநாள் , எனக்கு வேண்டிய நண்பரான ஆர்.நடராஜன் விருதுநகரிலிருந்து என்னைப் பார்க்க வந்தார். தன் துணைவியார் கமலத்திற்கு க்ஷயரோகம் இருப்பதாகக் கூறிவருத்தப்பட்டார். தாம்பரம் க்ஷயரோக ஆஸ்பத்திரிக்கு முதல் மந்திரி காமராஜிடம் ஒரு கடிதம் வாங்கிக் கொடுத்தால் நல்லது என்று அந்த நண்பர் என்னிடம் தெரிவித்தார். முதல் மந்திரியின் கடிதம் இருந்தால் ஆஸ்பத்திரியில் கவனித்துப் பார்ப்பார்கள் என்று என் உதவியை நாடினார் அந்த விருதுநகர் நண்பர். நான் அவரைக் கூட்டிக் கொண்டு தலைவர் காமராஜ் வீட்டிற்குச் சென்றேன். அங்கு அவரிடம் , நண்பரை பற்றியும் , அவர் மனைவி க்ஷயரோகத்தால் அவதிப்படுவதையும் விவரமாகச் சொன்னேன்.

உடனே தலைவர் நான் தாம்பரம் ஆஸ்பத்திரிக்கு கடிதம் எழுதித் தரத்தான் முதல் மந்திரியாக வேலை பார்க்கிறேனா? உனக்குவேறு வேலை இல்லை. நீயும் என்னிடம் கடிதம் வாங்க வந்து விட்டாயாக்கும் என்று சற்றுக் கடுமையாகவே சொன்னார். உங்களுக்குச் சிரமம் வேண்டாம்நான் வருகிறேன் என்று கூறிவிட்டு வாசல்வரை வந்துவிட்டேன். உடனே அவர் என்னைக் கூப்பிட்டார். க்ஷயரோகம் என்று சொல்கிறாய்.உடனே ஓடுகிறாயே. சரிசரி என்னைக் கோட்டையிலே வந்து பாரு என்றார் அவர். கோட்டையில் காமராஜைப் பார்த்தேன். உடனே கிருஷ்ணய்யாவிடம் சொல்லிக் கடிதம் கொடுக்கச் சொன்னார். கடிதம் கிடைத்ததும் என் நண்பருக்குத் திருப்தி ஏற்பட்டது.

ஒருநாள், விருதுநகர் போயிருந்தபோது தலைவரின் தாயாரைப் பார்த்தேன். அப்போது தன் மகள் நாகம்மாளின் (தலைவரின் தங்கை) மகன் ஜவஹருக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்றும்; வீட்டில் மலசலகூடம் (Lavatory) உடனடியாக அமைக்க வேண்டியுள்ளது எ ன்றும் என்னிடம் கூறினார்.

(தொடரும்)

# யாழ்.பிரதேச மத்தியஸ்த சபை

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் பொதுமக்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைக்குமுகமாக வண்ண்ண வைத்தீஸ்வரா கல்லூரியில் பிரதி ஞாயிறு தோறும் காலை 9.30மணி முதல் 12.30 மணிவரை யாழ்ப்பாண மத்தியஸ்தர் சபை செயற்படுகின்றது. இதன் தவிசாளராக வி.ஸ்ரீசக்திவேல் மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் இணைந்து செயலாற்ற மத்தியஸ்தர் பயிற்சிபெற்ற 27 அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். முறைப்பாடுகள் ஞாயிற்றுக்கிழமைகளில் ரூபா 5.00 கட்டணத்துடன் பதிவுசெய்யப் பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டு சமரச தீர்வுக்கான விடயங்கள் முன்னடுக் கப்படும்.

மூவர் கொண்ட குழுக்களாக பல குழுக்கள் செயற்படுவதால் காலதாமதமின்றி முறைப்பாடுகளுக் கான தீர்வினைக்காண முடிகின்றது. இவ் மத்தியஸ்தர் சபையானது நீதி மற்றும் நீதித்துறை மறுசீரமைப்பு அமைச்சினால் 1997ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க மத்தியஸ்தர் சபைகள்(திருத்தம்)சட்டத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட ஸ்தாபனமாகும்.

பின்வரும் பிணக்குகளை மத்தியஸ்தத்திற்கு ஏற்றுக்கொள்ளலாம் என வரையறுத்துள்ளனர்.

அ. ஓர் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை தொடர்பான பிணக்குகள்.

ஆ. ஆதனம் பற்றிய பிணக்குகள்.

இ. திருமணப் பிணக்குகள்.

ஈ. கடன்களுக்குட்பட்ட நிதிகள் விடயங்களுடன் தொடர்புபட்ட பிணக்குகள்(ரூபா 25,000.00 இற்கு உட்பட்டது)

உ. தீங்கு விளைவித்தல், பிழையான வழிகளில் தடுத்து வைத்தல் , தாக்குதல், அவதூறு, சேதம் , கையாடல் உட்பட்ட சிறிய பிணக்குகள்.

மேற்குறிப்பிட்ட பிணக்குகள் வரும்போது பிணக்காளர்களிற்கு பூரண திருப்தியளிக்கும் விதத்தில் பிணக்கினை தீர்ப்பதும் இச்சபை நாடியோரை மன மகிழ்வுடன் தீர்வினை ஏற்றுக்கொள்ள வைப்பதுமே இம் மத்தியஸ்தர் சபைகளின் நோக்கமாகும். இன்று நாட்டில் 252 மத்திஸ்தர் சபைகள் நிறுவப்பட்டுள்ளன.

06.08.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் யாழ். பிரதேச மத்தியஸ்த தினவிழா நடைபெறவுள்ளது. இவ்விழாவில் சன சமூக நிலைய உறுப்பினர்கள் , மக்கள் சேவையிலீடுபடும் சகல பொது ஸ்தாபன உறுப்பினர்களையும் கலந்துகொள்ளும் படி யாழ். பிரதேச மத்தியஸ்தர் சபை உறுப்பினர்கள் கேட்டுக் கொள்கின்றனர். (அ)

# நீரை உறிஞ்சாத முறையில் மலகூடக் குழிகள் அமைக்க மாநகரசபை அறிவுறுத்தல்

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும் மலகூடக் குழிகளினால் அருகிலுள்ள கிணற்றுநீரும், நிலத்தடி நீரும் மாசடைந்து வருவதாக நிலத்தடி நீர் பற்றிய ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தும் நோக்கில், எதிர்காலத்தில் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரிவுகளில் புதிதாக அமைக்கப்படும் மலகூடக் குழிகள் யாவும் நீரை உறிஞ்சாத முறையில் அமைக்கப்படல் வேண்டுமெனவும், அவ்வாறான அமைப்புக்களைக் கொண்டிராத கட்டட வரைபடங்கள் எதுவும் எதிர்காலத்தில் எம்மால் அங்கீகரிக்கப்படமாட்டாது எனவும், அவ்வாறு அமைக்கப்படும் குழிகள் நிரம்பப் பெற்றதும், கழிவகற்றும் வாகனங்கள் மூலமாக கழிவுகளை அகற்றுவதற்கான ஏற்பாடுகளை மாநகர சபையினால் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் சம்பந்தப்பட்டவர்களின் முக்கிய பொறுப்பு

## ஐ.நா.சபை அகதிகள் உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப் படுமென்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொள்ளும் வகையில் நேற்று முன்தினம் செய்தியாளர் மத்தியில் பேசும்போது இதற்காக விசேட செயற்திட்டம் அங்கீகரிக்கப் பட்டுள்ளதுஎன்று அவர் தெரிவித்துள்ளார்.ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஆக்கபூர்வமான விதத்தில் பதிலளித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தமக்கு சொந்தமான குடியிருப்புகளில் மீண்டும் குடியமர்வதை உறுதி செய்வது சம்பந்தப்பட்ட தரப்புக்களின் முக்கிய பொறுப்பாகுமென்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# கொக்குவில் சந்தை

நல்லூர் பிரதேசசபையின் கொக்குவில் சந்தைக் குத்தகை இரத்துச் செய்யப்பட்டு, தற்பொழுது சந்தை சபை உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்டு வருவதாக நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (அ)



நல்லூர் கந்தனின் உற்சவகாலப் பாவனைக்காக ஒலிபெருக்கி சாதனங்களை யாழ்.நகர வர்த்தகர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் அன்பளிப்பாக வழங்கி அவற்றை 27.07.2006 அன்று மாநகர ஆணையாளரிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# முஸ்லிம்களே ஒன்று சேருங்கள்! இஸ்ரேலை எதிர்க்க அழைப்பு


(டுபாய்)

லெபனான் மீது தாக்குதல் நடத்தும் யூதர்களை அனைத்து முஸ்லிம் இனத்தவர்



களும் ஒன்று சேர்ந்து எதிர்க்க வேண்டும் என அல்-குவைதா அமைப்பின் துணைத் தலைவர் அய்மேன் அல்-ஜாவாகிரி அழைப்பு விடுத்துள்ளார்.

சர்வதேச தீவிரவாதியான ஒசாமா பின்லேடனின் வீடியோ டேப்பை அடிக்கடி ஒளிபரப்பும் அல் ஜசீரா டிவி நேற்று அல்-குவைதா தீவிரவாத அமைப்பின் துணைத் தலைவர் அய்மேல் அல்-ஜாவாகிரியின் வீடியோ டேப்பை ஒளிபரப்பியது. இதில் லெபனான் மீது யூதர்கள் தாக்குதல் நடத்துகின்றனர். இந்த தாக்குதலுக்கு எதிராக போர் நடத்த அனைத்து முஸ்லிம்களும் ஒன்று சேர வேண்டும். உலகின் அனைத்து பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்களும் லெபனான் மீதான தாக்குதலை எதிர்க்க வேண்டும். யூதர்களுக்கு எதிரான போரில் உயிர் தியாகம் செய்ய தயாராக வேண்டும் என ஜவாகிரி தெரிவித்துள்ளார். (டு)



இஸ்ரேலிய ராணுவ டாங்க் ஒன்று லெபனான் எல்லையில் வைக்கப்பட்டிருந்த முள் வேலியை உடைத்துக்கொண்டு லெபனானுக்குள் சீறிப் பாய்கிறது

# இஸ்ரேலின் அகோர தாக்குதலால் மயான பூமியாக காட்சியளிக்கும் லெபனான்

இஸ்ரேல் இராணுவ வீரர்கள் 2பேரை லெபனானின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடத்திச் சென்றதை தொடர்ந்து லெபனான் மீது இன்று 15ஆவது நாளாக இஸ்ரேல் விமானங்கள் பெய்ரூட் உட்பட முக்கிய நகரங்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளது.

பெய்ரூட் அருகே உள்ள மின்சார நிலையம் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசியதில் அந்த மின்சார நிலையம் சேதம் அடைந்தது. மின் உற்பத்தியும் அடியோடு நின்றுவிட்டது. மின்சார நிலையத்தில் உள்ள எண்ணெய் சேமிப்பு கிடங்கும் தகர்க்கப்பட்டது.

அந்த கிடங்கில் சேமிக்கப்பட்டு இருந்த 10 ஆயிரம் டன் எண்ணை கடலில் கசிந்து லெபனான் கடல் பகுதி முழுவதும் பரவியுள்ளது. இதனால் கடல் நீர் மாசுபட்டு ஏராளமான மீன்கள் செத்து மிதக்கின்றன. கடலில் மிதக்கும் எண்ணெயால் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் தீவிபத்து ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் கடற்கரை பகுதிகளில் உள்ள வர்கள் பாதுகாப்பான இடத்துக்கு செல்லும்படி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. மேலும் 15 ஆயிரம் டன் எண்ணெய் கடலில் கலக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவம்-லெபனானின் ஹிஸ்புல்லா இயக்கத்தினர் நடத்தி வரும் எதிர் தாக்குதல் ஆகியவற்றில் இதுவரை 700க்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். லெபனான் தரப்பில் 600க்கும் மேற்பட்ட பொது மக்கள் பலியாகி விட்டனர். முக்கிய கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகிவிட்டன. பெய்ரூட்டை சுற்றி உள்ள பகுதிகள் மயான பூமியாக காட்சி அளிக்கின்றன. இடிபாடுகளில் சிக்கி உயிர் இழந்தவர்களில் இன்னும் 200க்கும் மேற்பட்ட உடல்கள் மீட்கப்படவில்லை.


இந்த நிலையில் கூடுதலாக 40 ஆயிரம் பேரை இராணுவத்தில் இஸ்ரேல் அரசு சேர்க்க இருக்கிறது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் லெபனானில் உள்ள 3 விமான நிலையம் தரைமட்டமாகி விட்டன. 62 பாலங்கள் இருந்த இடம் தெரியாமல் தகர்க்கப்பட்டு விட்டன.

லெபனான் மீது தாக்குதல் நடக்கும் அதே வேளையில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியிலும் இஸ்ரேல் விமானங்கள் தாக்கு தல் நடத்தியது. ஒரே நாள் தாக்குத லில் ஹமாஸ் தீவிரவாதிகள் பொது மக்கள் 23 பேர் பலியானார்கள். (டு)

WORLD NEWS
உலக தரிசனம்

# இந்தியாவுடனான அணுசக்தி ஒப்பந்தத்திற்கு அமெரிக்க காங்கிரஸ் சபை அமோக ஆதரவு

இந்தியாவுடனான அணுசக்தி உடன்பாட்டுக்கு அமெரிக்க பார்லிமென்டின் காங்கிரஸ் சபை, நேற்று முன்தினம் அமோக ஆதரவு அளித்தது. இது தொடர்பான மசோதாவுக்கு ஆதரவாக 359பேரும் எதிர்ப்பாக 68 பேரும் ஓட்டளித்துள்ளனர். இந்தியாவின் மின்சார தேவை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. இதை முன்னிட்டு அணுசக்தி மூலம் மின்சார உற்பத்தியை அதிகரிக்க இந்தியா திட்டமிட் டுள்ளது.



கடந்த ஆண்டு ஜுலையில் பிரதமர் மன் மோகன் சிங், நியூயோர்க் சென்று இருந்த போது இரு நாடுகளுக்கு இடையே அணுசக்தி ஒப்பந்தம் செய்து கொள்வதுஎன்றுதீர்மானிக்கப்பட்டது. கடந்த மார்ச் மாதம் அதிபர் புஷ் இந்தியா வந்து இருந்தபோது, இதற்கான உடன்பாடு உறுதியானது. இதன்படி இந்தியா தன்னிடம் உள்ள 22 அணு உலைகளில் 14 உலைகளில் மின்சாரம் தயாரிப்பது என்றும் இந்த 14 உலைகளையும் சர்வதேச அணுசக்தி ஏஜென்சியின் ஆய்வுக்கு உட்படுத்துவது என்றும் மீதியுள்ள எட்டு அணு உலைகளை அணு ஆயுத ஆய்வுக்கு இந்தியா பயன்படுத்திக்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இந்த உடன்பாட்டுக்கு அமெரிக்க பார்லிமென்ட் ஒப்புதல் அளித்தால் தான் இறுதி வடிவம் பெறும். அணு ஆயுத பரவல் தடை சட்டத்தில் கையெழுத்திடாத நாடுகளுக்கு யுரேனியம் சப்ளை செய்யக்கூடாது என்று அமெரிக்க சட்டம் சொல்கிறது. இந்தியாவுக்கு உதவவேண்டும் என்றால் இந்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் இதற்கு பார்லிமென்ட் ஒப்புதல் பெற வேண்டும்.

அமெரிக்க பார்லிமென்ட்டில் காங்கிரஸ் மற்றும் செனட் என இரண்டு சபைகள் உள்ளன. இந்த இரண்டு சபைகளின் சர்வதேச உறவுகள் கமிட்டிகளும் இந்தியாவுடனான உடன்பாட்டுக்கு ஒப்புதல் அளித்தன. தொடர்ந்து காங்கிரஸ் சபையில் நேற்று உடன்பாட்டுக்கு ஒப்புதல் பெறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அமெரிக்க மற்றும் இந்திய அணுசக்தி ஒத்துழைப்பை மேம் படுத்தும் சட்டம் 2006 என்ற சட்டமூலம் மீதான விவாதம் மீது நான்கு மணி நேரம் நடந்தது. (டு)


# சீனாவில் பலத்த மழை 612 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் தெற்கு பகுதியில் புகாமிபீபீ என்ற புயல் கடந்த 2 வாரங்களாக வீசி வருகிறது. இதனால் கடற்கரை நகரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. மழை புயலால் பலத்த சேதம் ஏற்பட்டு இருக்கிறது. இந்த மழைக்கு 612 பேர் பலியாகி இருக்கிறார்கள். 204 பேரை காணவில்லை.

இந்த புயலால் ஜியாங்சி, கின்சவா மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. அந்த பகுதியில் இராணுவ வீரர்கள் வசித்த குடியிருப்பு அடியோடு நாசம் அடைந்துவிட்டது. இதனால் அங்கிருந்த 38 இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர் கதி என்ன என்று தெரியவில்லை.

இந்நிலையில் இந்த புயல் பலவீனம் அடைந்துவிட்டதாக நேற்று வானிலை நிலையம் அறிவித்திருக்கிறது. (டு)



பசிபிக் கடலில் பயிற்சியை முடித்துக்கொண்டு ஹவாய் தீவில் உள்ள பியர்ல் துறைமுகத்திற்கு வந்த அமெரிக்காவின் மிகப் பெரிய போர்க்கப்பல் யு.எஸ்.எஸ். ஆபிரகாம் லிங்கன்

# என்னைச் சுட்டுக்கொல்லுங்கள் விசாரணையின் போது சதாம் ஆவேசம்

(பக்தாத்)

என் மீது குற்றம் இருந்தால் துப்பாக்கியால் என்னைச் சுட்டுக்கொல்ல உத்தர விடுங்கள். சாதாரண குற்றவாளிகள் போல் என்னை தூக்கில் போட வேண்டாம் என ஈராக் முன்னாள் அதிபர் சதாம்உசேன் கோர்ட்டில் தெரிவித்தார். இதற்கிடையில் சதாம் மீதான வழக்கு விசாரணை அக்டோபர் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

ஈராக் அதிபராக சதாம் உசேன் இருந்த போது 1982ஆம் ஆண்டு அவரைக் கொல்ல சதி நடந்தது. இதற்கு ஷியா பிரிவு முஸ்லிம்களே காரணம் என சதாம் நம்பினார். துஜெயில் பகுதியில் வாழ்ந்த ஷியா பிரிவு மக்கள் 148 பேரை படுகொலை செய்ய உத்தரவிட்டார்.

அமெரிக்க படையெடுப்பால் சதாம் ஆட்சி வீழ்ந்த பிறகு தற்போது இந்த வழக்கு பக்தாத் சிறப்பு கோர்ட்டில் நடந்து வருகிறது. இந்த வழக்கில் சதாம் மற்றும் அவரின் ஆதரவாளர்கள் ஏழுபேர் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

தனக்கு ஆதரவான வக்கீல்கள் படுகொலை செய்யப்பட்டதை கண்டித்து சதாம் உசேன் உண்ணாவிரதம் இருந்ததால் கோர்ட் டுக்குவர மறுத்தார். இதையடுத்து அவர்வலுக்கட்டாயமாககோர்ட்டுக்கு அழைத்து வரப்பட்டார். அப்போது வழக்கு விசாரணையில் ஆஜராவதில் இருந்து தனக்கு விலக்கு



அளிக்க வேண்டும் என சதாம் உசேன் கோரிக்கை விடுத்தார்.

அத்துடன் கோர்ட் தன்னை குற்றவாளி என தீர்மானித்து, தனக்கு மரண தன்டனை விதித்தால் தன்னை துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும். சாதாரண குற்றவாளிகள் போல் தூக்கில் போடவேண்டாம் என கேட்டுக்கொண்டார். (டு)

...பட்டவன் உங்களைத் திருப்பி அடிக்காவிட்டால் அவனிடம் எச்சரிக்கையாகவிருங்கள். ஏனெனில் அவன் உங்களை மன்னிப்பதும் இல்லை. நீங்கள் அவனை மறக்க முடிவதுமில்லை.

-பெர்னார்ட்ஷா

வலம்புரி

## விமானக் குண்டுத் தாக்குதல் சமாதான முயற்சியைப் பாதிக்கும்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள்மீது நடத்தப்படும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்.

கடந்த காலப் போரியல் வரலாற்றில் விமானக் குண்டுத் தாக்குதலே பொதுமக்கள் தரப்பில் அதிக உயிரிழப்பை ஏற்படுத்தியது.

சிறுவர்கள், பெண்கள் என்ற பேதமின்றி விமானக் குண்டுத் தாக்குதல்கள் பலி எடுத்தன. நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தின்மீது மேற்கொள்ளப்பட்டவிமானக் குண்டுத் தாக்குதல் இலங்கை அரசின் அராஜகத்தை வரலாற்றில் பதிவு செய்தது.

இந்நிலையில் தற்போது இருக்கக் கூடிய யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு மாறாக இலங்கைப் படைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விமானக் குண்டுத் தாக்குதல்கள் நடத்துவது யுத்தத்தைப் பிரகடனப்படுத்துவதாகவே பொருள் கொள்ளப்படும்.

அதேவேளை கடந்த காலங்களில் இலங்கை அரசு இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் யுத்த விமான ஓட்டிகள் மூலம் தமிழர் பகுதிகளில் குண்டு வீச்சு நடத்தியது.

இதுவே அரசின் அதியுச்ச போர் கொடுமையாக இருந்தது. பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டுத் தாக்குதலானது வேற்று நாட்டு யுத்தத்தில் தவிர்க்கப்பட்டிருந்தது.

ஆனால், இலங்கையில் சிறுபான்மையினம் என்ற ஒரே காரணத்திற்காக தமிழ் மக்களின் வாழ்விடங்கள், அவர்களின் வழிபாட்டுத் தலங்கள், பாடசாலைகள்மீது விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இவ்விதம் ஈவிரக்கமின்றி அரச படைகள் நடத்திய விமானக் குண்டுத் தாக்குதலால் தமிழ் மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்டதுடன் அவர்களின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டன.

தமிழர் தாயகத்தில் அரச படைகளால் வீசப்பட்ட ஒவ்வொரு விமானக் குண்டு வீச்சும் கட்டடங்களைத் தகர்த்திய அதேநேரம் தமிழர்களுக்குத் தனியான நாடு தேவை என்ற செய்தியையும் அழுத்திச் சென்றது.

சுருங்கக் கூறின் அரச படைகள் நடத்திய விமானக் குண்டுத் தாக்குதல்களே சிங்கள இனத்துடன் சேர்ந்து வாழ முடியாதென்ற முடிவை தமிழ் மக்கள் எடுப்பதற்கு உச்சமான காரணமாயிற்று.

நிலைமை இவ்வாறாக இருக்கும்போது மீண்டும் நடத்தப்படும் விமானத் தாக்குதல்கள் சமாதானம் என்ற எண்ணக்கருவை அடியோடு அறுத்துவிடும்.

## மண்ணை மீட்டெடுக்க மக்களே அணிதிரள்வீர்!

### தமிழீழ விளையாட்டுத் துறைப்பொறுப்பாளர் பாப்பா



தேசியத் தலைவரின் கரத்தைப் பலப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை விரிவுபடுத்தி எதிரியை எங்கள் மண்ணில் இருந்து விரட்டி அடித்து எமக்கான தேசத்தை பெற்றெடுக்க அனைவரும் அணிதிரள வேண்டும் என்று தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தெரிவித்துள்ளார்.

கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையின் உள்ளகப் பாதுகாப்பு அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். முழுமையான பங்களிப்புடன் நாம் பல வெற்றிகளை ஈட்டியிருக்கிறோம். இன்று எமது மக்கள் சகல விதமான பயிற்சிகளையும் பெற்று எதிரியை வெற்றிகொள்ளக் கூடியவர்களாக இன்று இருக்கிறார்கள். இதன்மூலம் எமது விடுதலையை விரைவாக வென்றெடுக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் எட்டாவது அணிக்கான உள்ளகப் பாதுகாப்பு பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பொதுச் சுடரேற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. தேசியக் கொடியினை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமானது.

இதில் பயிற்சி யின்போது நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் 800க்கு மேற்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சியினை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர். (து)

## "மகிழ் களம்" கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்கமானது கடந்த நான்கு வருடங்களாக சிறுவர்களுக்கான உளசமூகச் செயற்பாடு, பெண்களுக்கான உளசமூகச் செயற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன்தொடர்ச்சியாக சிறுவர்கள் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் ''மகிழ்களம்'' கண்காட்சி ஒன்றினை இன்று சனிக்கிழமை காலை 9.00மணிதொடக்கம் பி.ப 3.00 மணிவரை யா/கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலய அதிபர் சி.பவளகுமாரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராசா, கைதடி கிராம அலுவலர் எஸ். செல்வராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கைவினைத்திறன் படைப்புக்கள், மனம் விட்டு மகிழ்ந்தாடும் களம், சிறுவர் விளையாட்டுக்கள், அதிசய அனுபவம்-மாயாஜால நிகழ்வு, சிறுவர் நாடகம், இன்னும் சிறுவர்களின் பல எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்பன இடம்பெறவுள்ளன. (அ)

## உலகமே-தடைசெய்தாலும் மக்கள் ஆதரவு எமக்குண்டு மட்டு. மாவட்ட பொறுப்பாளர் அமுதன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீதான படுகொலை, அடாவடித்தனங்களை அவதானித்த மக்கள் தாமாக முன்வந்து கிராமியப் படைப் பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தலைமைச் செயலகப் பொறுப்பாளர் அமுதன் தெரிவித்தார். கோவில் போரதீவு கப்டன் சங்கர் பயிற்சிப் பாசறையில் கிராமியப் படைப்பயிற்சியின் நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போது அவர் இவ்வாறு குறிப் பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்பெல்லாம் தமிழர்களது வாழ்க்கை வரலாற்றில் இடம்பெறும் மகிழ்ச்சிகரமான விழாக்களாக பண்டிகைகள் இடம்பெற்றன. இன்றைய நிலையில் போராட்டத்திற்கான எழுச்சி நிகழ்வுகள் மகிழ்ச்சிகரமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்றைய இந்த நிகழ்வுகள் அனைத்துக்கும் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையும் அதன் எதிரொலியாக தமிழ் மக்கள் மேற்கொண்ட செயற்பாடுகளுமே.

உலகமே எங்களை தடை செய்தாலும் எங்கள் மக்கள் எங்களை ஆதரித்துக்கொண்டே இருக்கிறார்கள். தமிழ் மக்களின் கௌரவத்திற்காக தன்மானத்திற்காக திம்பு பேச்சுவார்த்தை தொடக்கம் இன்று வரை எத்தனை பேச்சுவார்த்தைகளைச் சந்தித்துள்ளோம். அன்னைபூபதி மட்டக்களப்பு அமிர்தகழியில் இருந்து இந்திய இராணுவத்தின் மீது அகிம்சை ரீதியாக போர்தொடுத்து இந்த மண்ணுக்கு பெருமை தேடினார்.

பேச்சுவார்த்தைக் காலத்தில் எத்தனையோ தமிழ் தலைவர்கள் படுகொலைகள், மிரட்டல்கள், வங்காலை படுகொலை, அல்லைப்பிட்டிப் படுகொலை இவ்வாறாக இன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் தமிழர்கள் மீதான அடாவடித்தனங்களை அவதானித்த தமிழ்மக்களே தங்களை கிராமியப் படையின் மூலம் இணைத்து பல்வேறு இடங்களிலும் பயிற்சி பெற்று வருகின்றனர்.

உலகத்தின் பாராமுகத்தினாலேயே இன்றைய நிலை எதிர்காலத்தில் இவ்வாறிருக்கும் போது மாவீரர் நாளாக இருக்கலாம் அல்லது பொங்கல் விழாவாக இருக்கலாம். அந்தக் காலத்தினை மையமாக வைத்து எங்கள் தலைமை போரினை தொடங்குவதற்கான அழைப்பினை விடுக்கின்ற காலம் தோன்றலாம். எனவே இவ்வாறான நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தங்களுக்கான பயிற்சி யினைப் பெற்றிருக்க வேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிட்டார். (அ)

## மின்சார நெருக்கடியை எதிர்கொள்ள தேசிய திட்டம் மின்பொறியியலாளர் மகாநாட்டில் தெரிவிப்பு

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரித்துச் செல்வதால் அரசாங்கம் பாரிய மின்சார நெருக்கடிக்குள்ளாவதாகவும் அதிகரித்து வரும் மின்சார நெருக்கடியை எதிர்கொள்வதற்கு மின்வலு பாதுகாப்பு தேசிய திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் மின்சக்தி, மின்வலு அமைச்சர் ஜோன் செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சாரசபையில் மின்சக்தி பாதுகாப்பு தேசிய வேலைத் திட்டம்தொடர்பாக பிரதேச மின் பொறியியலாளர்களுக்கு அறிவூட்டும் வைபவமொன்றில் தலைமை வகித்து பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டுக்குத் தேவையான மின்சாரம் எவ்வாறு உற்பத்தியாகிறது என்பதைத் தெரிந்து கொள்ளாத மக்கள் இன்று அதனை தேவையற்ற விதத்தில் பயன்படுத்தி வருகிறார்கள். வருடமொன்றிற்கு எவ்வளவு மின்சாரம் வீணாகின்றது என்பதையும் மக்கள் அறியாதுள்ளனனர்.

உலக சந்தையில் நாளுக்கு நாள் எரிபொருட்களின் விலை அதிகரித்த வண்ணம் உள்ளது. இதன் காரணமாக அரசாங்கம் பாரிய மின்சார நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மின்வலு பாதுகாப்புத் தேசிய வேலைத் திட்டமொன்றை அரசு ஆரம்பித்துள்ளது. இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பிப்பதால் வருடாந்தம் விரயமாகும் 25 சதவீதமான மின்சாரத்தை சேமிக்க முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில், மின்சார பாவனை தொடர்பாக நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையும் அறிந்து தெரிந்திருக்க வேண்டும். மின்சாரத்தை எவ்வாறு பாவிப்பது? எந்த இடத்தில் சிக்கனமாய்ப் பாவிப்பது? போன்ற விடயங்கள் குறித்து மக்கள் மிக அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டியது இன்றைய அவசிய தேவையாகும். மின்சாரத்தை சிக்கனமாகப் பாவித்து அதனை இயன்றளவு சேமிக்க முயல்வது இலங்கை மக்கள் அனைவரினதும் தலையாய கடமையும் பொறுப்புமாகும் என மேலும் தெரிவித்தார். (து-7)

## காலபோக நெற்செய்கைக்காக மானிய விலையில் உரம்

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் 2006/2007கால போக நெற்செய்கைக்காக மானிய அடிப்படையில் 50 கிலோ உரவகைகளை 350ரூபாவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி பகுதியில் நெற்காணி இடாப்பு தயாரிக்கும் வேலைகள் வைகாசி மாதம் தொடக்கம் நடைபெற்று வருகிறது.

இம்மாதம் ஆடிமாதம் முடிவுக்குள் கமக்கார அமைப்புக்கள் கிராம சேவகர்கள் ஊடாகத் தமது பெரும்போக உத்தியோகத்தரிடம் நெற்காணி இடாப்பு படிவங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந் நெற்காணி இடாப்புகளில் உள்ள பெயர்களுக்கு மாத்திரம் உரத்திற்கான மானியம் வழங்கப்படவுள்ளதாகவும் மற்றவர்களுக்கு வழங்கப்படமாட்டாதெனவும், கமக்காரர்கள் விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்து தமது கமக்கார அமைப்புக்களிடம் கையளிக்குமாறும் யாழ்.தலைமை காரியாலய பெரும்போக உத்தியோகத்தர் ச.உருத்திரேஸ்வரன் கேட்டுள்ளார். (து-35)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி எஸ்.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இப் பரிசளிப்பு விழாவிலே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளரும், கல்லூரியின் பழைய மாணவியுமான கலாநிதி திருமதி ஜெ.இராசநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். (து-52)

### தினமொரு சிந்தனை விவேகச் சிந்தனைகள்



மரத்தின் வேருக்கு நீரை ஊற்று. அது முழு மரத்திற்கும் நீர் பாய்ச்சியதற்கு ஒப்பாகும். இறைவனை முதலில் பற்றிக்கொள். அதன் மூலம் அனைத்தையும் நீ பெறுவாய். 'நான், எனது' எனும் எண்ணங்களை விட்டுவிடு. உலகில் தனக்கென எதுவும் இல்லாதவனை நாடியே இறைவன் வருகிறார்.

சுவாமி விவேகானந்தர்

# கண்காணிப்புக் குழுவினருடன் இளம்பரிதி சந்தித்துப் பேச்சு

யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதிக்கும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்



திப்பு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இச் சந்திப்பில் யாழ்.குடாநாட்டில் முகமூடி அணிந்த இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் பாடசாலை மாணவிகளை குறிப்பாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் உடுவில் மகளிர் கல்லூரியை அண்டிய பகுதிகளில் பாலியல் ரீதியான முறையில் இம்சைக்கு உட்படுத்தி வருவதாகக் கண்காணிப்புக் குழுவிடம் இளம்பரிதி தெரிவித்துள்ளார்.

இது சிறுவர்களுக்கு எதிரான பாலியல் கொடூரமான முறையாகும். மக்கள் முன்னிலையில் பகிரங்கமாக வெள்ளை வானில் வரும் இராணுவத்தினர் பருத்தித்துறை, சுப்பர்மடம், ஆதி கோவிலடி கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்களைக் கடத்திச் சென்றுள்ளனர்.

எந்தவிதமான வன்முறையில் ஈடுபடாத அப்பாவிப் பொது மக்கள் அண்மை நாட்களாக இராணுவத்தினராலும் துணைஇராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

காரைநகரில் தினமுரசு பத்திரிகை வாங்க மறுத்த அப்பாவிப் பொதுமகன் ஒருவர் ஈ.பி.டி.பியினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவ்வாறான காரணங்கள், கேள்விகள் இன்றியும் அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு வருகின்றனர். இது அப்பட்டமான அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பாகும் என சந்திப்பின் போது இளம்பரிதி மேலும் தெரிவித்தார்.

(ச-5)

# திருமலையில் கிளைமோர்த் தாக்குதல் 2 துணைப்படை வீரர்கள் வீரச் சாவு

(திருகோணமலை)

திருகோணமலை வெருகல் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் தமிழீழ தேசியத் துணைப்படை வீரர்கள்இருவர் வீரச் சாவடைந்துள்ளனர். நேற்று மாலை இச் சம்பவம்இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த சுந்தரம் யோகசீலன், சித்திரவடிவேல் ஜெயச்சந்திரன் ஆகிய தேசியத் துணைப்படை வீரர்களே வீரச்சாவடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ச-5)

## வேலைக்குச் சென்றவர் இராணுவத்தால் கைது

(யாழ்ப்பாணம்)

வேலையின் நிமிர்த்தம் நல்லூரை நோக்கிச் சென்று கொண்டிருந்த மடம் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விமலராஜா விக்னராஜா (வயது-23) என்பவர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவிடம் அவரது உறவினர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(து-15,133)

## மட்டக்களப்பில் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாண்டவன்வெளிப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

தாண்டவன்வெளி காணிக்கை மாதா தேவாலயத்திற்கு அண்மைய பகுதியில் இருந்து நேற்றுக் காலை இச்சடலம்மீட்கப் பட்டுள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவர் கல்முனை நற்பிட்டிமுனை என்ற முகவரியைச் சேர்ந்த விஜயதாசன் தேவரூபன் (வயது-26) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் மட்டக்களப்பு போதனா மருத்துவ மனையில் பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

(ச-5)

## வவுனியாவில்...

மூவரினதும் உடல்கள் ஹெப்பிட்டிக்கொல்லாவ மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளன.

சம்பவம் நடந்த பகுதியைப் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதாக வவுனியாத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## பொலிஸார்...

செய்திகள் தெரிவித்தன.

காயம் அடைந்த இருவரும் திருகோணமலை மருத்துவமனையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிர் இழந்ததாக மருத்துவமனை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.(ச-5)

## ஆட்டோ...

தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவைச் சேர்ந்த இந்த இருவரும் நேற்று மதியம் 12 மணியளவில் மஞ்சுக்கட்டு ஊடாக விடுதலைப்புலிகளின் முக்கிய நிலை ஒன்றைத் தாக்குவதற்காக சென்று கொண்டிருந்தபோதே இச்சம்பவம்இடம் பெற்றுள்ளது.

ஆட்டோவுக்குப் பக்கத்தில் காணப்பட்ட இருவரினதும் உடல்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் காணப்படுவதாக அப் பகுதிக்குச் சென்ற பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-5)

## மாவிலாறு...

இந்த நடவடிக்கையின்போது இராணுவத்தினருக்குத் துணையாக விமானப்படை விமானங்களும் நடவடிக்கைகளை மேற்கொண்ட அதேநேரம் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சுத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர்.

இந்த நகர்வு முயற்சிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் பதில் தாக்குதல் நடவடிக்கைகளால் முறியடிக்கப்பட்டன. இந்த முறியடிப்பு நடவடிக்கையின் போதேஇரு போராளிகள் வீரச் சாவடைந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

(ச-5)

## கண்காணிப்புப் பணியிலிருந்து...

செப்ரெம்பர் மாதத்திற்குள் விலகிட வேண்டும் என்று விடுதலைப்புலிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் பாதுகாப்புக் காரணங்களை மேற்கோள் காட்டி இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து விலக பின்லாந்து முடிவு செய்துள்ளது.

பின்லாந்தின் இந்த முடிவு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளைப் பாதிக்கும் என்று போர் நிறுத்தக் கணிகாணிப்புக் குழுவின் சார்பில் பேசவல்ல அதிகாரி தொர்பின் ஓமர்சன் தெரிவித்தார்.

தற்போதுள்ள கண்காணிப்புக்குழுவில் மொத்தம் 57 உறுப்பினர்கள் உள்ளனர். இதில் 11 பேர் பின்லாந்தைச் சேர்ந்தவர்கள். கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்ற பிற ஐரோப்பிய நாடுகளான சுவீடன் மற்றும் டென்மார்க் நாடுகள் முடிபை இதுவரை அறிவிக்கவில்லை.

டென்மார்க் மற்றும் சுவீடன் நாடுகளைச் சேர்ந்த 10 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புக் குழுவில் உள்ளனர். பின்லாந்து விலகியுள்ள நிலையில் கண்காணிப்புக் குழுவைத் தொடர்ந்து நடத்த தேவையான மாற்றுத் திட்டங்கள் தங்களிடம் உள்ளன என்று தொர்பின் ஓமர்சன் தெரிவித்துள்ளார்.

ஆனால் இது குறித்த விபரங்களை அவர் வெளியிடவில்லை. பின்லாந்துக்குப் பதில் புதிய நாட்டைச் சேர்ந்த கண்காணிப்பாளர்களை நியமிக்க வேண்டும் எனில் அதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப் பட்டது.

(ச-5)

## கண்டித்துப் பாடசாலை...

இராணுவத்தின் இத்தகைய செயற்பாட்டினை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இராணுவ ஆக்கிரமிப்பால் அல்லல்பட்டு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடும் கல்விச் சமூகத்தினருக்கு இராணுவம் விடுத்த அச்சுறுத்தலாகவே இது அமைந்துள்ளது.

குடாநாட்டு மாணவர்களதும் ஆசிரியர்களதும் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவுள்ள நிலையில் மேற்படி சம்பவம் மேலும் மேலும் அச்சம் ஊட்டுவதாய் அமைந்துள்ளது.

தனது வரம்புக்கு மீறி பொறுப்பற்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் இத்தகைய செயற்பாடுகளை இராணுவம் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஆயுதங்கள் அற்ற, அச்சுறுத்தல் அற்ற சூழலில் கற்கத் துடிக்கும் மாணவர்களின் வேட்கைக்கு தினமும் தீர்க்கப்படும் வேட்டுக்கள் அவர்களின் எதிர்காலத்தினை சூனியமாக்கி நிற்கிறது.எனவே உப அதிபர் தாக்கப்பட்ட சம்பவத் தைக் கண்டித்து எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று 'யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்கள் அனைவரும் கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணிக்கு மாறு வேண்டுகின்றோம்' என அவ்வமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக் கப் பட்டுள்ளது.

(ச)

## ஐரோப்பிய ஒன்றிய அறிவிப்புக்குப் பின்...

விளக்கினோம்.

முக்கியமாக பிரித்தானியாவைச் சேர்ந்த பிரதிநிதி என்ற வகையில் எங்களுடைய பல முக்கியமான விடயங்களை விரிவாக எடுத்து விளக்க வேண்டியிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தடை அறிவிப்பை செய்த பின்னர் சமாதான சூழ்நிலைகள் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது என்பதை அரச பயங்கரவாதமும் சிங்கள தீவிரவாத அமைப்புக்களும் தமது நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ள நிலையில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளை எடுத்து விளக்கினோம்.

அரசாங்கம் தற்போது யுத்தநிறுத்த உடன்பாட்டைச் சீர்குலைத்து எமது பிரதேசங்கள் மீதும் மக்கள்மீதும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டிருப்பதும் ஒரு பகிரங்க யுத்தப் பிரகடனம் போலவே எமது பகுதிகள்மீதும் மக்கள்மீதும் குண்டு வீச்சு விமானங்கள் மூலம் தாக்குதல்கள் நடத்திக் கொண்டிருப்பது ஒரு பகிரங்கமான யுத்தப் பிரகடனமாகவே அரசு செயற்படத் தொடங்கியுள்ளது.

இலங்கைப் படைகள் எமது பிரதேசங்கள் மீதும் எமது மக்கள்மீதும் விமானங்கள் குண்டுகளை வீசிக் கொண்டிருப்பது யுத்த நிறுத்த உடன்பாடு அமுலில் உள்ளதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

அத்தோடு சமாதான முயற்சிகளுக்கு ஒரு முழுமையான மூடு விழா நடத்தி அமைதி முயற்சிகளை இல்லாது ஒழிக்கின்ற முயற்சியாகச் சிங்களப் படைகளும் அரசாங்கமும் செயற்பட்டுக் கொண்டிருப்பது என்பதை சந்திப்பில் விளக்கினோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்புக்குப் பின்னால் அரசு தனது யுத்த நடவடிக்கையினைத் தீவிரப்படுத்தியுள்ளதையும் மக்கள் மீதான கெடுபிடிகளையும் இராணுவப் படுகொலைகளையும் வன்முறைகளையும் ஆட்கடத்தல்களையும் தொழில் முயற்சிகளையும் முற்றாகச் செயலிழக்கச் செய்து மக்களை ஒரு பாரிய அவலத்திற்குத் தள்ளுவது;

குழந்தைகள், பெண்கள் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுவது; பொருளாதாரத் தடைகளை விதிப்பது; இப்போது வெளிப்படையாக அரசினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்புக்குப்பின்னால்தான் இவை தீவிரப்படுத்தப் பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம். சிங்கள இனவாதிகள் எமது தாயகத்தை பிளவுபடுத்துவதற்கும் தாயகத்தின் ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்கும் வடக்குக் கிழக்கைப் பிரிக்க வேண்டும்என்ற கோரிக்கையை தீவிரப்படுத்தி மக்களை கொதி நிலைக்கு தள்ளியிருக்கின்றார்கள்.

அனைத்துத்தமிழ் மக்களும் கொதிப்படைய வைக்கும் நிலைக்கு சிங்களத் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அரச இராணுவ பயங்கரவாதமும் எமது மக்கள்மீதும் தேசத்தின் மீதும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது என்பதைவிலாவாரியாக எடுத்து விளக்கியுள்ளோம்.

சர்வதேச சமூகம் நாம் பேச்சுக்குச் செல்வதற்கும் தூண்டுதலும் ஆதரவும் ஒத்துழைப்பும்தான் காரணமாக இருந்திருக்கிறது.

தமிழ் மக்களின் தலைமையோ மக்களோ சிங்களத் தலைமையை ஒருபோதும் நம்பியதில்லை. சிங்களத் தலைமைகள் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக வரலாறு இல்லை.

தற்போதைய அமைதி முயற்சிகளில் சர்வதேச சமூகத்தினுடைய அனுசரணை, ஈடுபாடு, பங்களிப்பு என்பதுதான் முக்கியமாக அமைந்தது.

ஐரோப்பிய ஒன்றியம் மேலும் பல நாடுகள் அரசாங்கத்திற்குச் சாதகமாக தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்திற்கு எதிராக அறிவிப்புக்களை, நிலைப்பாடுகளை எடுத்ததன் காரணமாக சிங்கள இனவாதிகளும் தீவிரவாத சக்திகளும் தீவிரமடைந்து அரச பயங்கரவாதம் தமிழ் மக்கள்மீது மிக மோசமாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

சர்வதேச சமூகத்தின் ஒருதலைப்பட்சமான போக்கு நடவடிக்கை தமிழ் மக்களை பெரும் அவலத்திற்கு தள்ளியுள்ளது என்பதைஇன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டினோம்.

எமது தாயகத்தில் உள்ள மக்கள் கொதிப்படைந்து மிகவும் கவலையடைந்த நிலையில் தற்போது குரல் எழுப்பி வருகின்றார்கள். எமது மக்கள் சர்வதேச சமூகம்மீது வைத்திருந்த நம்பிக்கையை இழந்த நிலையில் அமைதி முயற்சிகளுக்கு பாரிய பங்கம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை விளக்கினோம்.

தற்போது தமிழ் மக்கள் ஒன்றை உணர தரப்பட்டிருக்கின்றார்கள். சர்வதேச சமூகம் எடுத்த முடிபுகள் என்பது தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டத்தை பலவீனப்படுத்த முயல்கிறார்களோ என்ற சந்தேகம் கூட ஏற்பட்டிருக்கின்றது.

சர்வதேச சமூகம் இலங்கைத் தீவில் தமிழ் மக்களுக்கும் ஒரு நியாயமான தீர்வு ஏற்பட்டு இலங்கைத் தீவில் இரு தேசங்களும் ஒரு இணக்கமான சூழலுக்குள் ஒரு தீர்வைக் காண வேண்டுமாகவிருந்தால் இரு தரப்பையும் சமத்துவமாக மதித்து சிங்கள தரப்பையும் தமிழர் தரப்பையும் சமனாகப் பேணி அவ் அடிப்படையில் அணுகுமுறைகளையும் செல்வாக்குகளையும் செலுத்துகின்ற போதுதான் நியாயபூர்வமான தீர்வு இரு தேசங்கள் மத்தியிலும் ஏற்படும் என்பதை இச் சந்திப்பில் விளக்கியுள்ளோம் என தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

(ச-5)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 29.07.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.